## வானவில் கலையகம்

உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் HD தொழில் நுட்பத்தில் போட்டோ பிடித்து நவீன தொழில்நுட்பத்தில் செய்து பெற்றுக்கொள்வதற்கும் –

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internet மூலம் உங்கள் நிகழ்வுகளை அதி உயர்தரத்தில் நேரடியாக Online Videoவில் பார்த்து மகிழ்ந்திடவும் –

**இன்றே நாடுங்கள்**

வானவில் கலையகம்
330, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
www.vanavilstudio.com
T.P.: 021 222 9466, 0772487550



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 59 | வெள்ளிக்கிழமை ஜூலை 07 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48


# கள்ள மணல் அகழ்வு

# அதிரடிப்படை துப்பாக்கிச் சூடு




தனங்களப்பில் இருந்து சாவகச்சேரிக்கு மணல் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு உழவியந்திரங்களை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நீண்ட காலமாக தனங்களப்பில் இருந்து வயல்வெளி ஊடாக வேலாயுதம் வீதி வழியாக சாவகச்சேரிக்கு மணல் கடத்தப்பட்டு வந்துள்ளது. இதை முறியடிக்கும் விதமாக இன்று அதிகாலை விசேட அதிரடிப் படையினர் ரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதிகாலை 1.30 மணியளவில் மணல் ஏற்றி வந்த உழவியந்திரங்கள் மூன்றினை வேலாயுதம் வீதியில் வைத்து விசேட

06



## மீண்டும் அழைப்பு

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரட்நாயக்கவை எதிர்வரும் 13 ஆம் திகதி பாரிய நிதி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவருடன் முன்னாள் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, மேஜர் ஜெனரல் உதய அனஸ்லி பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சிரிபால ஹெட்டியாரச்சி ஆகியோரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிமெந்து உற்பத்திசாலையில் 600 தொன் எடையுடைய இயந்திர சாதனங்களை அறுத்து பழைய இரும்புக்காக விற்பனை செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## 5,62,000 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

இலங்கையில் 5 இலட்சத்து 62 ஆயிரத்து 288 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன சபையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

06

## வவுனியாவில் பொலிஸார் மீது இளைஞர்கள் குழு தாக்குதல்

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் நேற்று இரவு 11 மணியளவில் வீதியில் சென்ற பொலிஸார் மீது அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனால் பொலிஸார் அப்பகுதியிலிருந்து அவசர அவசரமாக தப்பிச் சென்றுவிட்டனர்.

உக்கிளாங்குளம் பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் மதுபோதையில் நின்ற இளைஞர்கள் சிலர் பொலிஸார் சென்ற மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்களைத் தாக்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து பொலிஸார் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. முறைப்பாடுகளும் மேற்கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது. எனினும் ஆலயத்தில் பொருத்தப்பட்ட சீசீடீவி கமராவை வாங்கிய பொலிஸார் இளைஞர்கள் தாக்குதல் மேற்கொண்ட காட்சிகளை பார்வையிட்டு அது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது. (எ)




## ‘கரு’ தலைமையில் கலந்தாய்வு கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

தேசிய ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கம் போன்றவற்றை உறுதிப்படுத்தும் வகையில் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களை சர்வமதப் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமகாலத்தில் தோன்றியுள்ள இன ரீதியான முறுகல் நிலையை கட்டுப்படுத்துவதும், தேசிய ரீதியில் சகவாழ்வினை உறுதிசெய்வதும் இதற்காக அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும் இணைந்து தேசிய ஒற்றுமைக்காக புரிந்துணர்வுடன் எவ்வாறு செயற்படுவது என்பன தொடர்பில் ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் மனோ கணேசன், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அமைச்சர் ரவி கருணாநாயக்க, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

## ரணிலுக்காக விசேட அமர்வு




பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக பாராளுமன்ற விசேட அமர்வொன்றை அடுத்த மாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரதமரின் 40 ஆண்டு கால பாராளுமன்ற சேவையை மதிக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பில் நேற்று நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த உடன்பாடு

06


## மட்டக்களப்பில் ‘ஒப்பிரேஷன் முதலை’



இலங்கை இராணுவத்தின் கொமாண்டோப் படைப்பிரிவும், கடற்படையின் மரைன் படையணியும் இணைந்து நேற்று முன் தினம் ‘ஒப்பிரேஷன் முதலை’ என்னும் பெயரிலான போர்ப் பயிற்சியில் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

06

# வெளிநாடு வேண்டாம்



## ரணில் கோரிக்கை

வெளிநாட்டுப் பயணங்களை எதிர்வரும் நாட்களில் தவிர்க்கு மாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அரச தரப்பைச் சேர்ந்த 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த அணிக்கு விரைவில் மாற வுள்ளதாகத் தகவல்கள் வெளியான தன் பின்னணியிலேயே ரணில் இவ் வாறு அறிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத வெளிநாட் டுப் பயணங்கள் இருப்பின் அது குறித்து முன்னரே தனக்குத் தெரி யப்படுத்துமாறும் ரணில் கோரி யுள்ளார். (ஆ)

# உரும்பிராயில் லொறி விபத்து



உரும்பிராய் பகுதியில் லொறி ஒன்று குடைசாய்ந்துள்ளது. இன்று காலை எரு மூட்டைகளை ஏற்றவந்த லொறியே விபத்திற்குள் ளாகி குடைசாய்ந்துள்ளது.

உரும்பிராய்ச் சந்திப் பகுதியிலிருந்து மருதனார்மடம் நோக்கி அதிவேகமாக வந்த குறித்த லொறி வளைவு ஒன்றில் திருப்ப முடி யாது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதில் ஒன்றுடன் மோதியுள் ளது. இதன்போது மதில் சேதமடைந்ததுடன் தொலைத்தொடர்பு கம்பம் ஒன்றும் முறிவடைந்துள்ளது. (எ)

# அரசில் இருந்து வெளியேறுவேன்!

இந்த நாட்டில்பௌத்த மதத்துக்கு உரிய இடம் வழங்கப்படாவிட்டால் அரசில் தொடர்ந்து இருக்கப்போவதில்லை யென அமைச்சர் அர் ஜூன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

புதிய அரசியலமைப் பால் பௌத்த மதம் இந்த நாட்டில் வகித்து வரும் இடத்துக்கு பங்கம் எது வும் ஏற்படுமா? என்று சிங் கள ஊடகம் ஒன்று எழுப் பிய கேள்விக்குப் பதில ளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"புதிய அரசியலமைப் புத் திட்டத்தால் பௌத்த மதம் இரண்டாவது இடத் துக்குத் தள்ளப்பட்டுவிடு மென பீதியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களது பொய்ப் பிரசாரங்கள் முற்றிலும் அரசியல் சம்பந்தப்பட் டவை. பௌத்த மதத் தைக் காப்பாற்ற முயற்சி செய்யும் நாங்கள் ஏனைய மதங்களுக்குரிய உரிமை யையும், அந்தஸ்தையும் நிச்சயம் வழங்குவோம்" என்றார்.(அ)

# வங்கியில் வைப்பிலிடப்பட்ட 20 இலட்சம் ரூபா மாயம்

## வவுனியாவில் சம்பவம்



வவுனியாவில் தனியார் வங்கி ஒன்றில் வைப்பிலிடப்பட்ட 20 இலட்சம் ரூபாவை வேறு ஒருவர் கையாடல் செய்து பணத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் தனியார் வங்கி ஒன்றில் கடந்த 05.06.2017 அன்று வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்வதற்கு சி. ஜெக ராசா என்பவர் இருபத்திரெண்டு இலட்சத்து இருநூற்றி ஐம்பது ரூபாவினை வைப்பிலிட்டு புதிய கணக்கு ஒன்றினை ஆரம்பித்துள் ளார்.

இதையடுத்து தனது வெளி நாட்டு சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் முகவர் ஒருவரிடம் தனது வங்கிப் புத்தகம், கடவுச்சீட்டு என்பனவற்றை பயண ஒழுங்குகள் மேற்கொள்வதற்காக ஒப்படைத் துள்ளார். முகவருக்கு கடந்த சில தினங்களாக தொலை பேசி அழைப்பு எதுவும் எற்படுத்த முடியவில்லை. இதையடுத்து சந்தேகம் ஏற்பட்டு நேற்று முன் தினம் வங்கிக்கணக்கை சரிபார்த்த போது அவரது வங்கி கணக்கில் 20இலட்சம் ரூபாவை நாரமல என்ற பகுதியிலுள்ள வங்கியிலி ருந்து கடந்த 29ஆம் திகதி மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை வாடிக்கையாளருக்கு தெரியவந் துள்ளது.

இதையடுத்து வவுனியாவில் உள்ள குறித்த வங்கி முகாமை யாளருடன் ஏனைய விபரங்கள் ஆலோசனைகள் பெறப்பட்டதை யடுத்து வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவ லகத்தில் முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளது. (எ)

# முதல் சந்திப்பு



புதிய பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கபில வைத்தியரத்ன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த னவை சந்தித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் அழைப்பின்பேரில் அவரது காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இரு வருக்குமிடையில் கலந்துரையாடலும் இடம்பெற்றது. (உ)

# இந்து இளைஞரை வீழ்த்தி சம்பியனானது மத்தி







அரியாலை சனசமூக நிலையத் தின் 68ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியில் நடத்திவந்த கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சூடிக்கொண்டது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழில் முன்ன ணிக் கழகங்களான ஆவரங்கால் மத்தி மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடை பெற்ற இந்தப் போட்டியில் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் ஆவரங்கால் மத் திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ஐ-50)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# பொலிஸுக்கே இலஞ்சம் கொடுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத் தின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரி டம் 20,000 ரூபா இலஞ்சம் பெற்ற அதே பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காலி முகத்திடலுக்கு அருகில் வைத்து இலஞ்சம் பெற்றுக் கொள்ளும் சமயத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத் தின் சுற்றாடல் பிரிவு பொறுப்பதிகாரி யாக பணியாற்றும் உப பொலிஸ் பரி சோதகருக்கு எதிராக சீன நிறுவனம் ஒன்றினால் பொலிஸ் தலைமையகத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டை சீன நிறுவனத்திடம் கூறி திரும்ப பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்வதாக கூறியே இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாக ஆணைக் குழு கூறியுள்ளது.

இது சம்பந்தமான வழக்கு இன்று விசாரிக்கப்பட்ட போது சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் லால் ரண சிங்க உத்தரவிட்டுள்ளார். (உ)

# ஜப்பானில் பெருமழை 4 லட்சம் பேர் பாதிப்பு





ஜப்பானில் பெய்து வரும் கனமழையால் 4 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான ஜப்பானில் பருவமழை கடந்த சில நாட்களாகப் பெய்து வருகிறது. இது தற்போது தீவிரமடைந்துள்ளது.
பசிபிக் பெருங்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நேற்று முன்தினம் முதல் பலத்தமழை கொட்டி வருகிறது. ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள கியுசு தீவுக்கு உட்பட்ட புகுவோகா மற்றும் ஒயிட்டா நிர்வாக மண்டலங்களில் இடி-மின்னலுடன் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.
இந்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. அடர்த்தியான கிராமப்புறங்களை உள்ளடக்கிய புகுவோகா மற்றும் ஒயிட்டா பகுதிகளில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. பல இடங்களில் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன.
சில பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளதுடன், மரங்களும் முறிந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளன.
இந்த மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் சுமார் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர்.
வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்ட அவர்கள் அனைவரும், அங்குள்ள பள்ளி, கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். (இ)

## திறக்கப்பட்டன திரையரங்குகள்

நான்கு நாட்களாக நீடித்த திரையரங்க உரிமையாளர்களின் போராட்டம் முடிவுக்கு வந்ததையடுத்து, இன்றுமுதல் மீண்டும் படக்காட்சிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கேளிக்கை வரிப் பிரச்சினை தொடர்பாகத் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை திரையுலகினர் பல கட்டங்களாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தி தங்கள் கோரிக்கையை வற்புறுத்தி வந்தனர். நேற்று 4 ஆவது நாளாக இந்தப் போராட்டம் நீடித்தது. நேற்று மாலை மீண்டும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை திரையுலகினர் சந்தித்துப் பேசினார்கள்.
இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.
இதைத்தொடர்ந்து போராட்டத்தை வாபஸ் பெறுவதாக திரையரங்கு உரிமையாளர்கள் அறிவித்தனர். (இ)

# மிக் நொருங்கியது



இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே மிக்-23 ரக பயிற்சி விமானம் ஒன்று வீழ்ந்து, நொருங்கியது. எனினும் விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.
இது குறித்து இந்திய விமானப்படைத் தரப்பில், “ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இருந்து 60 கி.மீ., தூரத்தில் உள்ள பாலேசர் எனும் பகுதியில் மிக்-23 ரக விமானம் விபத்துக்குள்ளானது. வழக்கமான பயிற்சியின் போது இந்த விபத்து நடந்துள்ளது. விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் பத்திரமாக உள்ளனர்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. (இ)


# தாக்குதலுக்குத் தயார்




சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளை மீறி ஏவுகணைப் பரிசோதனை செய்து வரும் வட கொரியா மீது இராணுவத் தாக்குதல் நடத்த தயார் என அமெரிக்கா அதிரடியாக அறிவித்துள்ளது.
அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைப் பரிசோதனை செய்ய ஐ.நா சபை தடை விதித்துள்ள நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் வட கொரியா மீண்டும் ஏவுகணைப் பரிசோதனையை நிகழ்த்தியுள்ளது.இதனைத் தொடர்ந்து அமெரிக்காவை சேர்ந்த ஐ.நா. சபை தூதரக அதிகாரி அவசர ஆலோசனை ஒன்றை நேற்று நடத்தியுள்ளார்.
அப்போது, “எதிர்ப்புகளை மீறி ஏவுகணைப் பரிசோதனை செய்து வரும் வட கொரியா மீது உலக நாடுகள் தங்களது தூதரக உறவுகளைத் துண்டிக்க வேண்டும்.வட கொரியாவின் அத்துமீறல்களைத் தடுக்க உள்ள வழிகளில் அந்நாட்டின் மீதான இராணுவத் தாக்குதலும் ஒன்று. அவசியம் என்றால் வட கொரியா மீதான இராணுவத் தாக்குதலுக்கு அமெரிக்கா தயாராகவே உள்ளது” என்று அந்த அதிகாரி கூறினார். (இ)

## பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு பிரான்ஸில் தடை

பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு வரும் 2040 ஆம் ஆண்டுக்குள் முற்றாகத் தடை விதிக்கப்படும் என்று பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.
பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை சுற்றுச்சூழலுக்கு மட்டுமின்றி, மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாலேயே பிரான்ஸ் அரசு இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
இது குறித்து பிரான்ஸ் நாட்டு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் நிக்கோலஸ் ஹூலட், “பரிஸ் ஒப்பந்தத்தின்படி 2040 ஆம் ஆண்டுக்குள் பிரான்ஸில் பெற்றோல், டீசல் வாகனங்களின் விற்பனை முடிவுக்கு கொண்டு வரப்படும் .
இந்த முடிவு கடினமான முடிவு தான். இருந்த போதிலும் இந்தத்திட்டத்தை செயற்படுத்தியே தீருவோம். வாகனங்களுக்காகப் பார்த்தால் மக்கள் வாழ முடியாது” என்று திட்டவட்டமாக கூறியுள்ளார். (இ)



# சிறுநீர் கழித்தவர் ரயிலுக்குப் பலி!



பிரான்ஸ் நாட்டில் தண்டவாளத்தில் நின்று சிறுநீர் கழித்தவர் ரயிலில் மோதி பலியாகியுள்ளார்.
பிரான்ஸ் தலைநகரான பரிஸுக்கு அருகில் உள்ள ரயில் நிலையத்துக்குச் சென்ற 25 வயதான இளைஞர் ஒருவர், இயற்கை உபாதையை அடக்க முடியாமல் , தண்டவாளத்தில் நின்று சிறுநீர் கழித்துள்ளார்.
அப்போது, தூரத்தில் ரயில் ஒன்று வந்து கொண்டு இருப்பதை அவர் கவனிக்கவில்லை. அதே சமயம் தண்டவாளத்தில் நின்ற போது திடீரென கால் சறுக்கி கீழே விழுந்துள்ளார்.
இதனைச் சற்றும் எதிர்பாராத ஓட்டுநர் ரயிலை நிறுத்த முயன்றுள்ளார். ஆனால், கண் இமைக்கும் நேரத்தில் இளைஞர் ரயிலில் மோதுண்டு துடிதுடித்துப் பலியானார். (இ)

# உயிருடன் சாப்பிடுவேன்



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டி அதிகாரிகள் மத்தியில் பேசியபோது , “இஸ்லாமியத் தீவிரவாதிகளை உயிருடன் சாப்பிட்டுவிடுவேன்”என்று கூறியுள்ளார்.இது பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.
ஒரு நாட்டின் ஜனாதிபதி போன்று பேசாமல், காட்டுவாசிகள் போல அவர் கருத்து வெளியிட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.
எனினும் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மாலுமிகளில் இருவர் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையிலேயே, ரோட்ரிகோ இந்தக் கருத்தினைத் தெரிவித்துள்ளார். (இ)

# இறகுகளைத் திருடியவருக்கு சுவிஸில் 3 வருடச் சிறை

சுவிட்சர்லாந்து நாட்டில் பறவை இறகுகளைத் திருடிய 45 வயதான நபருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.
குறித்த நபர், கடந்த 2005 முதல் 2012 வரை 7 ஆண்டுகளாக சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி மற்றும் ஒஸ்திரியா ஆகிய நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களுக்குச் சென்று பறவை இறகுகளைத் திருடி வந்துள்ளார்.
2012 ஆம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள முனிச் நகரில் பறவை இறகைத் திருடிய சமயத்தில், இவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.
அதன்பின்னர் அவரது வீட்டைப் பொலிஸார் சோதனையிட்ட போது, அங்கு பதுக்கப்பட்டிருந்த சுமார் 10,000 இறகுகள் கண்டுபிடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டன.பறிமுதல் செய்யப்பட்ட இறகுகளின் மொத்த மதிப்பீடு 6 மில்லியன் பிராங்க் என மதிப்பிடப்பட்டுள்ளது.சந்தேக நபர் மீதான குற்றம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (இ)

## அஜித்துக்கு உதவும் விவேக்



''விவேகம்' படத்தில், பிரபல ஹிந்தி நடிகர் விவேக் ஓபராய் வில்லனாக நடிக்கிறார் என தகவல் பரவிக்கொண்டிருந்தது.

ஆனால், இந்தப் படத்தில், விவேக் ஓபராய் வில்லன் இல்லை என்றும், கதாநாயகன் அஜித்துக்கு உதவுகிற ஒரு முக்கிய கதாபாத்திரத்தில்தான் அவர் நடிக்கிறார் எனவும் தற்போது தகவல் வெளியாகியிருக்கிறது. (ஒ)

## கலக்கும் வின்சென்ட்



ஜெயம் ரவி கதாநாயகனாக நடித்து வரும் 'டிக் டிக் டிக்' படம் முடிவடையும் நிலையில் உள்ளது. சக்தி சௌந்தரராஜன் இயக்க, ஜெபக் தயாரித்துள்ளார்.

இந்தப் படத்தில் வில்லன் கிடையாது. இது, ஒரு விஞ்ஞான ரீதியிலான கதை. வின்சென்ட் அசோகன் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இது தவிர, 'வட சென்னை' படத்தில் பொலிஸ் அதிகாரியாகவும், 'துப்பறிவாளன்,' 'இரும்புத் திரை,' 'நெருப்புடா' ஆகிய படங்களிலும் முக்கிய கதாபாத்திரங்களில் வின்சென்ட் அசோகன் நடிக்கிறார். (ஐ)

# குறிஞ்சிக்குமரன், றேஞ்சஸ் அரையிறுதிக்குத் தகுதி





நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணிகள் வெற்றி பெற்றன.

முதலில் நடைபெற்ற போட்டி ஒன்றில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற குறிஞ்சிக்குமரன் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

குறிஞ்சிக்குமரன் அணி சார்பாக கஜநாதன் 2 கோல்களையும் பெற்றுக் கொடுத்தார்.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பாசையூர் சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி மோதியது.

முதல் பாதியில் இரு அணிகளுமே சிறப்பாக விளையாடியமையால் கோல் எதுவும் இன்றி முடிய, இரண்டாவது பாதியில் பரபரப்பு ஆட்டம் அரங்கேறியது.

சென். அன்ரனிஸ் பின்கள வீரரின் தவறினால் றேஞ்சஸ் அணிக்கு 'பனால்டி' வாய்ப்புக் கிடைத்தது. இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய தாரா கோலாக மாற்ற, 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சஸ் அணி.

ஆட்டம் முடிவடைய 4 நிமிடங்கள் இருந்த நிலையில் றேஞ்சஸ் அணியின் பின்கள வீரர் செய்த தவறினால் சென். அன்ரனிஸூக்கு 'பனால்டி' உதை வழங்கப்பட்டது. இதை அந்த அணி கோலாக மாற்ற, 1:1 கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதனால் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக 'பனால்டி' உதை வழங்கப்பட்டது. இதில் 5:4 என்ற கோல் கணக்கில் றேஞ்சஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)

# மனோகராவை வென்றது யங்கம்பன்ஸ்



கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அல்வாய் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியின் 5ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்சன் முதல் கோலைப் போட்டார். மீண்டும் யங்கம்பன்ஸ் அணிக்கு கோல் போடும் வாய்ப்பு 15ஆவது நிமிடத்தில் கிடைத்தது. இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திய அணித் தலைவர் ரதன் மற்றொரு கோலைப் போட்டார்.

முதல் பாதியில் யங்கம்பன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியிருந்த நிலையில், இரண்டாவது பாதியாட்டத்தில் 36ஆவது நிமிடத்தில் மனோகரா அணிக்குக் கிடைத்த 'பனால்டி' உதைமூலம் கோல் ஒன்று கிடைத்தது. பின்னர் 39ஆவது நிமிடத்திலும் கோல் போட்டு ஆட்டத்தை 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலைப்படுத்தியது.

பின்னர் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட 'பனால்டி' உதையில் 3:2 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் அணி கோல் காப்பாளர் மகிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# தொடரை வசப்படுத்தியது இந்தியா




மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ஐந்தாவது போட்டியிலும் வெற்றிபெற்ற இந்திய அணி ஒருநாள் தொடரையும் தன்வசப்படுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

இதில் முதல் நான்கு ஆட்டங்களில் ஓர் ஆட்டம் முடிவின்றி முடிய இரு ஆட்டங்களில் இந்தியாவும் ஓர் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும் வெற்றிபெற்றிருந்தன.

இந்நிலையில் நான்காவது மற்றும் கடைசிப் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்களைச் சேர்த்தது. அந்த அணி சார்பாக ஆகக்கூடுதலாக ஹோப் 51 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

பின்னர் இலகுவான வெற்றியிலக்கைத் துரத்திய இந்திய அணி, கோஹ்லியின் சதத்தின் (111 ஆட்டமிழக்காமல்) உதவியுடன், 36.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 206 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிக் கனியைப் பறித்தது.

இந்த வெற்றிமூலம் இந்திய அணி,3-1 என்ற கணக்கில் தொடரையும் தன்வசப்படுத்தியது. ஆட்டத்தின் நாயகனாக இந்தியாவின் விராட் கோஹ்லியும், தொடரின் நாயகனாக ரஹானேயும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ)

# 3ஆவது சுற்றில் ஜோகோவிச்



விம்பிள்டன் டென்னிஸில் செர்பிய வீரர் ஜோகோவிச் 3ஆவது சுற்றுக்கு எளிதில் முன்னேறினர்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6:2, 6:2, 6:1 என்ற சுற்றுக் கணக்கில் ஆடம் பாவ்லா செக்கை (செக்குடியரசு)பந்தாடினார்.

இதேவேளை நடைபெற்ற பெண்கள் ஒற்றையரில் ரஷ்ய வீராங்கனையான குஸ்னெட்சோவா 6:0, 7:5 சுற்றுக் கணக்கில் சக நாட்டவரான மகரோவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றை எட்டினார். செக்குடியரசின் பெட்ரா கிவிடோவா 3:6, 6:1, 2:6 என்ற சுற்றுக் கணக்கில் அமெரிக்காவின் மேடிசன் பிரங்கிளிடம் அதிர்ச்சிகரமாக தோல்வியை தழுவினார்.

ஆண்கள் இரட்டையர் முதலாவது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பெயஸ் - கனடாவின் அடில் மாஸ்தின் ஜோடி, 6:4, 6:4, 2:6, 6:7, 8:10 என்ற சுற்றுக் கணக்கில் அவுஸ்திரேலியாவின் ஜூலியன் நோலோ பிலிப் ஆஸ்வால்ட் இணையிடம் போராடித் தோற்றது. (ஐ)

# குழந்தைகளை நீங்களே வடிவமைக்கலாம்

அடுத்த 30 ஆண்டுகளில் குழந்தைகளுக்காக குடும்பம் நடத்தும் முறை வழக்கொழிந்து, தங்களுக்கு வேண்டிய மாதிரி குழந்தையை ஆய்வகங்களில் வடிவமைத்துக் கொள்ளலாம் என அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள புகழ்பெற்ற ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் துறையின் இயக்குனராக உள்ளவர் ஹாங்க் கிரேலி.

இவர் கடந்த பல ஆண்டுகளாக குழந்தையை உருவாக்கும் முறை மற்றும் உயிரின் உருவாக்கம் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் தனது பல்கலைக்கழக வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"தம்பதிகள் தங்கள் டிஎன்ஏ-வை வைத்து ஆய்வகங்களில் கருவை வடிவமைக்கும் முறை இன்னும் முப்பது ஆண்டுகளில் மிகவும் பிரபலமாகி விடும்" எனவும் அவர் தெரிவித்தார்.(ஐ)



# இன்றைய கருத்தோவியம்



நன்றி - அத தெரண

# துறைமுகங்களை விற்கமாட்டோம்



எந்தவொரு துறைமுகமும் எந்த வகையிலும் விற்பனை செய்யப்பட மாட்டாது என்று துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க பாராளு மன்றத்தில் தெரிவித்தார். வர்த்தக கப்பல் தொடர் பான சட்டத்தின் கீழான கட்டளைகள் மற்றும் கடற்றொழில் நீரியல் வள திருத்தச் சட்ட மூலம் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மஹிந்த சமரசிங்க தொடர்ந்து உரையாற் றுகையில் நாட்டின் எந்தவொரு வளத்தையும் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. 2010ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டு வரையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலம் 44 ஆயிரம் மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கடன் சுமையை நாட்டால் சுமக்க முடி யாது. இதனால் முதலீடு களுக்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. இது தொடர்பான உடன்படிக்கை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக் கப்படும் என்றும் அமைச் சர் தெரிவித்தார். (உ)

## யாழ்தேவியில் பாய்ந்து குடும்பஸ்தர் தற்கொலை

யாழ்ப்பாணத்தில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கி பயணித்த புகையிரதத் தில் பாய்ந்து குடும்பஸ்த ரொருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தில், வேரஹெர பிரதேசத்தை சேர்ந்த 34 வயதான இளம் குடும்பஸ்தரொருவரே உயி ரிழந்துள்ளதாகத் தெரி யவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## சுகாதாரப் பணியாளர் டெங்கால் மரணம்

டெங்கு நோய் காரண மாக சிகிச்சை பெற்று வந்த ராகம கொழும்பு வைத்தியசாலையின் தலைமைச் சுகாதார முகா மைத்துவ உதவியாளர் அந்த வைத்தியசாலை யிலேயே உயிரிழந்துள் ளார். தலைமை சுகாதார முகாமைத்துவ உதவியா ளர் அனோமா திஸா நாயக்க என்பவரே இவ் வாறு உயிரிழந்துள் ளார். தீவிர சிகிச்சைப் பிரி வில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளதாக வைத் தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிரிழக்கும் போது அவருக்கு 57 வயது. ஒரு பிள்ளையின் தாயான அவர் எல்பிட்டிய ஊர கஹ பிரதேசத்தை சேர்ந்த வராவார். கடந்த 25ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக ராகம வைத்தியசாலை யில் அவர் அனுமதிக்கப் பட்டார். (உ)

# சார்க் நாடுகள் 8 ஆவது மாநாடு



சார்க் நாடுகளின் சட்டம் மற்றும் சமாதா னம் தொடர்பான அமைச்சர்களின் 8வது மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை நடைபெற வுள்ளதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க அலரிமாளிகையில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். வடமேல் மாகாண அபிவி ருத்தி உள்நாட்டலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய் யப்பட்டுள்ள இந்த மாநாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைப் பார். இந்த மாநாட்டில் பயங்கரவாத தடுப்பு உள்ளிட்ட கூட்டு உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (உ)

## அடையாள வேலை நிறுத்தம்

உள்நாட்டு இறைவரி சட்ட மூலத்தின் நகல் வரைவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊழியர் கள் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டனர். உள்நாட்டு இறைவரி தொழிற்சங்க கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று ஊட கவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி உள்நாட்டு இறைவரி சட்டமூலம் தொடர்பில் விளக்கமளித்திருந்தனர். குறித்த சட்டமூலம் சம்பந்த மாக அரசாங்கம், தொழிற் சங்க சம்மேளனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று உள்நாட்டு வருமான பொது சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் அஜித் புஷ்பகுமார கூறினார். (உ)

## ஆயுர்வேத வைத்தியர்கள் 293 பேர் நியமனம்

புதிதாக 293 ஆயுர்வேத வைத்தியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் . இவர்களுக்கான நியமனம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான விபரங் கள் இன்று வெளியாகியுள்ள வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.
பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு வழங்கும் முன்னுரிமை பட்டியலை அடிப்படையாக கொண்டு இந்த நியமனம் வழங்கப் படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. ஆயுர்வேத வைத்தியர்களாக தகுதி பெற்று 600 பேர் காணப் படுகின்றனர்.
ஏனையோருக்கான நியமன மும் விரைவில் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளது. (உ)



## செயலமர்வு

தகவல் அறியும் சட்டம் தொடர்பான வட மாகாண ஊடகவியலாளர்க ளுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு இன்று காலையில் யாழ்ப்பாணத்திலு ள்ள கிரீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்றது. இச் செயலமர்வில், ஊடக அமைச்சின் செயலாளர் ரமணி குணவர்த்தன, ஊடக அமைச்சின் அதி காரிகள்,வட மாகாண ஊடகவிய லாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (உ-04)

## சிறுமி துஷ்பிரயோகம்: சந்தேகநபர் கைது

திருகோணமலை, பம்புறுகஸ்வெவ பகுதியில் 13 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் 26 வயதுடைய நபரொருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக கோமரங் கடவெல பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே இடத்தைச்சேர்ந்த எஸ்.பி. ஏ.டி.எம். ரத்னாயக்க (26வயது) எனவும் பொலி ஸார் தெரிவித்தனர். குடும்பத் தகராறு காரணமாக தாயும் தந்தையும் பிரிந்திருந்த நிலையில் தந்தை சுகயீனம் காரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் பாட்டியுடன் வாழ்ந்து வந்த சிறுமி வெளியே சென்றிருந்தபோது இரண்டு திருமணங்களை முடித்து, விவாகரத்துப் பெற்றுத் தனியாக காலத்தை கழித்து வரும் 26 வயதுடைய சந்தேகநபர் சிறுமியை பயமுறுத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸ் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)
வேதனம்: 15,000 + ஊக்கப்படி
தொடர்புக்கு: 021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com


## நாளை நாளும் கோளும்

08.07.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 24ஆம் நாள்
சதுர்த்தி மு.ப. 8.29 வரை | மூலம் பிற்பகல் 03.31 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 08.58-10.28 | சுபநேரம் 02.58-04.28 | எமகண்டம் 01.28-02.58

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | பயம் | ஆக்கம் | சிக்கல் | அன்பு | இலாபம் | களிப்பு | நலம் | உயர்வு | சோர்வு | பாசம் |

# மனைவியைக் கொன்றவர் இலங்கைக்கு வந்தார்



கனடாவின் கியூபெக் மாநிலத்திலுள்ள மொன்றியல் நகரத்திலுள்ள குடியிருப்பில் வைத்து, தனது மனைவியைக் கொலை செய்த ஈழத்தமிழர் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை, நேற்று( வியாழக்கிழமை) நள்ளிரவு வந்தடைந்த அவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர் என, விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், தனது 21 வயது மனைவியான அனுஜா பாஸ்கரனை கொலை செய்த குற்றச்சாட்டில், கனடாவில் நிரந்தரக் குடியுரிமையை பெற்ற இலங்கையரான சிவலோகநாதன் தனபாலசிங்கம் (31 வயது) கனேடிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கழுத்தில் 20 முறை குத்தப்பட்டிருந்த நிலையில், அனுஜா பாஸ்கரனின் சடலம் மீட்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கனேடிய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்ற நிலையில் அவரை நாடு கடத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனையடுத்து கனடாவில் இருந்து அவர் இலங்கைக்கு விமான மூலம் நாடுகடத்தப்பட்டார்.(ஆ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1990.07.07**

திருகோணமலை சம்பூரில் இலங்கை இராணுவத்தினர் சுற்றிவளைப்பை நடத்தி, அதன் போது தம்மிடம் பிடிபட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 127 பொதுமக்களைப் படுகொலை செய்தனர்.

# இலங்கையில் "சியைற்" சர்வதேசக் கண்காட்சி

"சியைற்" சர்வதேசக் கண்காட்சி 2019ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெறவுள்ளது. இது தொடர்பான வேலைத்திட்டங்களை நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார். 187 நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரம் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். அழிவுக்குள்ளாகும் அச்சுறுதலை எதிர்நோக்கியுள்ள தாவர இனங்கள், விலங்கினங்கள் என்பனவற்றை பாதுகாத்தல், இவற்றின் சட்டவிரோதமான வர்த்தகத்தை தடுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி இதன்போது ஆராயப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (உ)

# சீனாவுடன் ஒப்பந்தம்

தேசிய சுற்றாடல் மற்றும் கால்நடை பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் புதிய புரிந்தணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா கடந்த மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்த உடன்படிக்கையில் சீனாவின் சார்பில் அந்நாட்டு வனவள அமைச்சர் கைச்சாத்திட்டார். தேசிய சுற்றாடல் மற்றும் கால்நடை பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த உடன்படிக்கையின் கீழ் தேவையான விசேட அனுபவங்கள், பயிற்சிகளை வழங்குதல், தொழில்நுட்ப தகவல்கள் என்பன இந்த உடன்படிக்கையில் கீழ் இடம்பெறவுள்ளன. இதன் மூலம் தொழில்வாய்ப்புகள் பல உருவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# இலங்கை மீன்பிடிச் சட்டம் இந்திய மீனவர்கள் எதிர்ப்பு

மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையின் உத்தேச சட்டத்துக்கு இந்திய மீனவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். வெளிநாட்டுப் படகுகள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டால் பாரியளவு தொகை அபராதத்தை விதிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டுக் கப்பல்கள் படகுகளுக்கு இரண்டு கோடி ரூபா முதல் 20 கோடி ரூவா வரையில் அபராதம் விதிக்கும் வகையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டம் இந்திய மீனவர்களை பெரிதும் பாதிக்கும் எனவும் இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்டம் அமுல்படுத்தப்பட்டால் குறிப்பாக தமிழக மீனவர்கள் பெரும் நெருக்குதல்களை எதிர்நோக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

**தேர்த் திருவிழா**



வரலாற்று பிரசித்தி பெற்ற பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலயத் தேர் உற்சவம் இன்று முற்பகல் 10 மணி யளவில் பக்தி பூர்வமாக நடைபெற்றது.(இ)

# மகிந்தவுக்கு இடமில்லை

இனிமேல் எந்தவொரு தேர்தலிலும் மகிந்தவுக்கு இடமளிக்கப்படாது என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மகிந்த ஆட்சியில் ஊழல் மோசடிகளும் சுதந்திரக் கட்சியைக் குடும்பச் சொத்தாக்கிக் கொள்ளும் முயற்சிகளும்தான் இடம்பெற்றன. குடும்பமே கட்சியை நிர்வகிக்கும் திட்டம்தான் அவரிடம் இருந்தது. அந்தத் திட்டங்கள் அனைத்தையும் நாம் உடைத்தெறிந்துவிட்டோம்.இனி மகிந்தவுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. எந்தத் தேர்தலிலும் அவர் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட முடியாது. அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கமாட்டோம். ஆயினும் போர் வெற்றி போன்ற சில விடயங்களில் ஈட்டிய புகழ் அவருக்குத் தொடர்ந்து இருக்கும். அதில் நாம் கைவைக்கமாட்டோம். அதற்காக அவரிடம் நாட்டை ஒப்படைத்து சீரழிவதைப் பார்க்க நாம் தயாராயில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.(ஆ)

## உதவி



வடமாகாணசபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் குடும்பம் ஒன்றுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. யாழ் மாநகரசபைக் குட்பட்ட கொட்டடி பகுதியில் வசிக்கும் சின்னத்துரை குகதாஷன் என்பவருக்கு நேற்றையதினம் சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து சிமெந்துப் பைகளை வழங்கிவைத்தார். (ஊ-09)

**தொடர்ச்சிகள்**

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படையில் அண்மையில் உருவாக்கப்பட்ட மரைன் பற்றாலியனைச் சேர்ந்த, 100 கொமாண்டோக்களும், இராணுவக் கொமாண்டோ அணியைச் சேர்ந்த 60 வீரர்களும் இந்தப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - வாகரைக் கடற்கரைப் பகுதியில் நேற்று முன் தினம் இந்தச் சிறப்புப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

கடல் மற்றும் தரைவழியாக ஏற்படக் கூடிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தக்க வகையில், தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில், இந்தப் போர்ப் பயிற்சிநடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஆ)

## 5,62,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊட்டச்சத்து குறைபாடுள்ள பிள்ளைகளில் மூன்று பிரிவினர் உள்ளனர். அதில் நிறை குறைந்த 2,43,066 சிறுவர்களும், உயரம் குறைந்த 1,43,955 சிறுவர்களும், பருமன் குறைந்த 1,77,267 சிறுவர்களும் என மொத்தம் 5,64,288 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் மற்றும் சுகாதார அமைச்சின் குடும்பநல சேவை அலுவலகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் போசணை மீதான ஆய்வின் மூலம் மேற்படி எண்ணிக்கை கணிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## கள்ள மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப் படையினர் வழிமறித்துள்ளனர். இதன்போது ஒரு உழவியந்திரம் தப்பிச் சென்றுள்ளது. மேலும் இரண்டு உழவியந்திரங்களைக் கைவிட்டுவிட்டு சாரதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

இதேவேளை அதிகாலை வேளை துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். உழவியந்திரம் ஒன்றினுடைய சக்கரங்கள் காற்றுப் போய் காலைவரை வீதியில் நின்றுள்ளது. கைப்பற்றப்பட்ட உழவியந்திரங்களை விசேட அதிரடிப்படையினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (எ-04)

## ரணிலுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இன்று காலை 10.30 மணிக்கு பாராளுமன்றம் கூடியுள்ளது. இதன்போது 11 தனிப்பட்ட யோசனைகள் மீதான விவாதம் இடம்பெற்றன. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 07.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.